# மு. சிவலிங்கத்தின் சிறுகதைகளில் வெளிப்படும் மலையகத் தொழிற்சங்கச் செயற்பாடுகள் : ஒரு பகுப்பாய்வு

**ஜெயசீலன், எம்.எம்**

தமிழ்த்துறை, பேராதனைப்பல்கலைக்கழகம்.
*jseelanuop@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம் –** மலையகத் தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் தொழிற்சங்க அரசியலும் முக்கிய பேசுபொருளாக விளங்கிவருகின்றது. ஒவ்வொரு படைப்பாளியும் தமது கருத்துநிலை மற்றும் புரிதலுக்கு ஏற்ப தொழிற்சங்கச் செயற்பாடுகளை ஆதரித்தும் விமர்சித்தும் வருகின்றனர். அவர்களுள் மு.சிவலிங்கம் தனித்துச் சுட்டிக்காட்டத் தக்கவர். மலையகச் சிறுகதைப் பரப்பில் தொழிற்சங்கம் பற்றிய அதிகமான பதிவுகளைத் தந்தவராக அவரே விளங்குகின்றார். ஆரம்ப காலத்தில் அவர் தொழிற்சங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததால் அந்நேரடி அனுபவம் அது பற்றிய அதிகமான பதிவுகளைத் தருவதற்கு காரணமெனலாம். மலையகத் சிறுகதைகள் குறித்தும் மு.சிவலிங்கத்தின் படைப்புக்கள் குறித்தும் இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள் தொழிற்சங்கச் செயற்பாடுகள் அவரது சிறுகதைகளில் வெளிப்படுமாற்றினைத் தனித்து விரிவாக ஆராயவில்லை. அதனால் இவ்ஆய்வானது மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளில் தொழிற்சங்கச் செயற்பாடுகள் பற்றி எவ்வாறான பதிவுகள் இடம்பெற்றுள்ளன என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளில் தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்த பதிவினைத் தரும் பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும், பிரிட்டிஸ் முகாம்கள் தகர்க்கப்படுகின்றன, ஒரு ரட்சகனின் புறப்பாடு, மார்கழிப் பூக்கள், சங்ககாலம், எங்க ஊர் தேர்தல், வடதிசைக் காற்று, மேற்கில் தோன்றிய உதயம் ஆகிய கதைகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ள இவ்ஆய்வு, உள்ளடக்க பகுப்பாய்வு முறையில் விளக்கமுறைத் செலுத்திவருகின்றன என்ற பதிவுகள் இடம்பெற்றுள்ளதோடு தற்போது இயங்குகின்ற தொழிற்சங்கங்களுக்கு மாறாக மாற்றுத் தொழிற்சங்கங்களை அமைத்தல், அவற்றின் தேவை குறித்த பதிவுகளும் அவரது சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளன. தொழிலாளர்களின் எழுச்சிக்கும் விழிப்புணர்வுக்கும் தொழிற்சங்கச் செயற்பாடுகள் அடிப்படையாக அமைந்தன, தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக ஒன்றிணைந்து போராட தொழிற்சங்கங்கள் களம் அமைத்துத்தந்தன, மலையகத் தமிழரின் அரசியல் அபிவிருத்தியில் தொழிற்சங்க அரசியலே முன்னிலை வகிக்கின்றது என்பன மலையகத் தமிழரின் மேல்நோக்கிய அசைவின் எழுச்சிக்கு தொழிற்சங்கங்கள் ஆற்றிய பங்களிப்பாகவும் தொழிற்சங்கங்களின் பெருக்கத்தினால் அவற்றுக்கு இடையே முரண்பாடுகள் பெருகி, தொழிலாளர் ஐக்கியத்தைச் சிதைந்தன. தொழிலாளர்களின் போராட்டங்களும் தியாகங்களும் சொற்ப விலைக்கு தொழிற்சங்கங்களாலே விற்கப்பட்டு வருகின்றன என்பன தொழிலாளரின் வீழ்ச்சிக்கான செயற்பாடுகளாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொழிற்சங்கங்களின் இவ்வீழ்ச்சியான போக்குக்கு அத்தொழிற்சங்கங்கள் முதலாளித்துவ பின்புலத்தில் இயங்குவதே காரணமெனக் கூறும் மு.சிவலிங்கம், அப்பிற்போக்குத் தனங்களைக் களைந்து மாற்றுத் தொழிற்சங்கங்கள் அமைக்க வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தியுள்ளார். அவை தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்பை ஏற்படுத்துவதாக அமைவதோடு தொழிற்சங்கங்கள் செயற்படவேண்டிய பாதைகளை இனங்காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

**திறவுச் சொற்கள்:** சமூக அசைவியக்கம், தொழிற்சங்கம், தொழிற்சங்க அரசியல், மலையகத் தமிழர்

## I. அறிமுகம்

மலையகத் தமிழரின் சமூக வாழ்வியலோடு இரண்டறக் கலந்ததாக அவர்களிடையே தொழிற்படும் தொழிற்சங்கங்கள் விளங்கிவருகின்றன. அத்தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள், அவற்றின் அரசியல் ஆகியன மலையகத் தமிழ்ச் சிறுகதைகளின் முக்கிய பேசுபொருட்களில் ஒன்றாக விளங்கிவருகின்றன. ஒவ்வொரு படைப்பாளியும் தமது கருத்துநிலைக்கு ஏற்ப மலையகத் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளை ஏற்றும் நிராகரித்தும் விமர்சித்தும் படைப்பாக்கங்களை மேற்கொண்டு வருகின்றனர். மலையகத் தொழிற்சங்க இயக்கங்கள் பற்றியும் மலையகச் சிறுகதைகள் பற்றியும் வெளிவந்துள்ள ஆய்வுகளில் சிறுகதைகளில் வெளிப்படும் தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்து விரிவான ஆய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்பட்டில்லை. தொழிற்சங்கங்கள் பற்றிய பிரதான ஆய்வுகள் (S.Nadesan:1993, சோ. சந்திரசேகரன்:1989, த.கிருஸ்ணமோகன்:2008) தொழிற்சங்கங்களின் வரலாற்றையும் அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களையுமே மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் தொழிற்சங்கங்கள் பற்றிய இலக்கியப் பதிவுகளை அவை ஆய்வுக்குட்படுத்தவில்லை. மலையகச் சிறுகதைகள் பற்றி வெளிவந்துள்ள முக்கிய ஆய்வுகளில் (தெளிவத்தை ஜோசப்:2000, சாரல்நாடன்:2014, க.அருணாசலம்:1994) தொழிற்சங்கங்கள் பற்றிய சிறுகதைப் பதிவுகள் இடம்பெற்றுள்ளபோதும் அவ்ஆய்வுகள் மலையகத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றினை எழுதுவதை நோக்காகக் கொண்டிருப்பதால் தனித்த பேசுபொருட்கள் குறித்து விரிவாக ஆராயாது காலத்துக்குக் காலம் தோன்றிய சிறுகதைகள், சிறுகதை ஆசிரியர்கள் பற்றிய தகவல்களையே பெரிதும் தந்துள்ளன. அதனால் மலையகத் தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்த சிறுகதைப் பதிவுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மலையகத்திலிருந்து அடையாளப்படுத்தக்கூடிய பல முக்கிய சிறுகதையாசிரியர்கள் மேற்கிளம்பியுள்ள போதிலும் தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்த பதிவினைப் பரவலாக மேற்கொண்டவராக மு.சிவலிங்கம் விளங்குகின்றார். 1960களிலிருந்து தொடர்ந்து சிறுகதைத் துறையில் இயங்கிவரும் அவர் நாவல், மொழிபெயர்ப்பு, ஆய்வு எனப் பல தளங்களில் இயங்கிவருகின்றார். யதார்த்த வாதத்தை முதன்மையான வெளிப்பாட்டு உத்தியாகக் கொண்டுள்ள அவர், ஆரம்ப காலத்தில் தொழிற்சங்கச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்குபற்றி, பின்நாளில் தனிப்பட்ட காரணங்களால் சுயமாக தொழிற்சங்கச் செயற்பாடுகளில் இருந்து விலகியவராவார். அதனால் அவருக்கு தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்த நேரடி அனுபங்கள் பல உண்டு. அதன் காரணமாகவே தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்த பதிவுகள் அவரது சிறுகதைகளில் பரவலாக இடம்பெறுகின்றன. அதனால் மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளை மட்டும் ஆய்வு எல்லையாக வரித்துக்கொண்டுள்ள இவ்வாய்வு, அவரது ஒரு விதை நெல் (2005), ஒப்பாரிக்கோச்சி (2010), வெந்து தணிந்தது காலம் (2013) ஆகிய தொகுப்புக்களில் தொழிற்சங்கம் பற்றி பேசுகின்ற பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும், பிரிட்டிஸ் முகாம்கள் தகர்க்கப்படுகின்றன, ஒரு ரட்சகனின் புறப்பாடு, மார்கழிப் பூக்கள், சங்ககாலம், எங்க ஊர் தேர்தல், வடதிசைக் காற்று, மேற்கில் தோன்றிய உதயம் ஆகிய சிறுகதைகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முற்றிலும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பண்புசார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வு, உள்ளடக்க பகுப்பாய்வு முறைமையில் விளக்கமுறைத் திறனாய்வின் அடிப்படையில் பகுத்தாராயப்பட்டுள்ளது. அதன்படி மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளில் வெளிப்படும் தொழிற்சங்கச் செயற்பாடுகளைப் பின்வருமாறு பகுத்துநோக்கலாம்.

## II. தொழிலாளர்களின் எழுச்சியும் விழிப்புணர்வும்

பெருந்தோட்டத்துறை உருவாக்கப்பட்ட காலம் முதல் பல்வேறு அடக்குமுறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாகிய தொழிலாளர்கள், அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடவில்லை. அவ்வாறு ஈடுபடுவதற்கான சூழலோ தொழில் பாதுகாப்போ எவையும் அற்றநிலையே தொடர்ந்தது. அதனால் பலரும் அத்தகைய அடக்குமுறைகளை வெறுப்போடு சுமந்தனர். சிலர் ஆங்காங்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு தண்டனைகளை அனுபவித்துள்ளனர். அச்சமூகத்திலிருந்து தொழிற்சங்கம் உருவான பின்பே அத்தகைய அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் குறையத்தொடங்கின. இதற்கு அவர்கள் சார்பாகப் பேசக்கூடிய அதிகாரமிக்க அமைப்பின் தோற்றமும் கூட்டிணைந்த எதிர்ப்பும் முக்கிய காரணிகளாக அமைந்தன. அத்துடன் சில தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளால் முற்போக்குத்தளத்தில் சிந்திக்கின்ற இளந்தலைமுறையினர் உருவாக்கம் பெற்றனர். அவர்கள் தமது சமூகம் குறித்து அக்கறையுடன் செயற்படத்தொடங்கியதோடு மொத்தச் சமூகத்தையும் வழிநடத்துபவர்களாகவும் மாற்றங்கண்டனர். அதனால் மலையகத் தமிழரிடையே விழிப்புணர்வும் எழுச்சியும் பெருகத்தொடங்கியது. உதாரணத்துக்கு, மு.சிவலிங்கத்தின் "பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும்" என்ற கதையில் தொழிற்சங்கச் செயற்பாடுகளில் ஈடுபடும் புதிய தலைமுறையினரின் முற்போக்கு எண்ணமும் எதிர்கால மலையகம் குறித்த எதிர்பார்ப்புகளும் போராட்டத்துக்கு அவர்கள் தயார் செய்துள்ள பின்வரும் சுலோகங்கள் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது:

"உழைப்புக்கேற்ற சம்பள உயர்வு கொடு!
வீடு கட்டுவதற்கு நிலம் கொடு!, தோட்டப் பிரதேசங்களில் தொழிற்பேட்டைகளைத் திற!, புதிய பரம்பரையினருக்குப் புதிய தொழிலைக் கொடு!
தரிசு நிலங்களைச் சுயதொழிலுக்காக வழங்கு!
எங்கள் பாரம்பரிய நிலத்தில் குடியேற்றங்கள் செய்யாதே, தோட்டத் தொழிலிலேயே எங்களை அடைத்து வைக்காதே" (சிவலிங்கம், 2005: 94,95)
இச்சிந்தனைகள் புதிய மலையகத்தின் வெளிப்பாடுகளாகும். தமது பிரச்சினைகளை நெஞ்சுக்குள் சுமந்து புழுங்குவதால் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்பதை உணர்ந்த இளந்தலைமுறையினர் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணச் செயற்படத் தொடங்கியதன் வெளிப்பாடாக இதனைக் கொள்ளலாம்.

## III. தொழிலாளர்களின் உரிமைகளுக்காக ஒன்றிணைந்து போராடுதல்

பெருந்தோட்டத் தொழிலாளர்களிடையே தொழிற்சங்கங்கள் உருவாகும்வரை அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் எவ்வித சமூகநல அமைப்புக்களும் அவர்களிடையே தோற்றம்பெறவில்லை (சந்திரசேகரன்:1989). அதனால், பெருந்தோட்ட நிர்வாகம் ஒற்றைப்படையாக எடுக்கும்

முடிவுகளே தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டன. தொழிலாளர்களின் நலன்சார்ந்தன்றி முதலாளிகளின் நலன்நோக்கியே எல்லாத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்நிலையில் தோட்ட நிர்வாகத்தின் அடாவடித்தனங்களை எதிர்ப்பதற்கும் தொழிலாளர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெற்றுக்கொள்வதற்குமான வாயில்களைத் தொழிற்சங்கச் செயற்பாடுகளே திறந்துவிட்டன. அதனால் தொழிலாளர்கள் ஒன்றுகூடி தமது பிரச்சினைகளைப் பேசுவதற்கும், உரிமைகளை வென்றெடுப்பதற்கும், அவற்றைப் பெற்றுக்கொள்ளப் போராடுவதற்கும் வாய்ப்புகள் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக, மு.சிவலிங்கத்தின் "பிரிட்டிஸ் முகாம்கள் தகர்க்கப்படுகின்றன" என்ற கதையில் ஒரு தோட்டத்திலுள்ள ஐந்து தொழிற்சங்கங்களின் தலைவர்களும் ஒன்றுகூடி லயன் வாழ்க்கை முறையை ஒழித்து, வீடு, காணி, விவசாயம் என்ற கலாசாரத்தில் இறங்கி சுயமாக வாழ்வதற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முன்வர வேண்டும் என்பது தொடர்பாக கலந்துரையாடுவதுடன் அவற்றைச் சாத்தியப்படுத்தும் செயற்பாடுகளிலும் இறங்குகின்றனர் (சிவலிங்கம், 2010: 119,120). இது தொழிலாளர்களின் ஒற்றுமையையும் ஒற்றுமையின் பலத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

### IV. தொழிற்சங்கச் செயற்பாடுகளும் மலையகத் தமிழரின் அரசியல் அபிவிருத்தியும்

"இலங்கை அரசியலில் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களின் செயற்பாடானது, தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அரசியல் செய்முறையில் இணைத்துச் செல்கின்ற ஒரு கருவியாகவுள்ளது. அதேநேரம், அதிகாரப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவினைப் பெற்று வெற்றி பெறுவதற்காக அரசியல் கட்சிகள் பயன்படுத்தும் துணை நிறுவனங்களாகவும் தொழிற்சங்கங்கள் உள்ளன" (கிருஷ்ணமோகன், 2008: 31). அதனால் மலையகத் தமிழரின் அரசியல் அபிவிருத்தியில் தொழிற்சங்கங்களின் பங்களிப்பு பிரதானமானதாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக, மலையகத்தில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட முனைபவர்கள் யாவரும் ஒரு தொழிற்சங்கத்தை நிறுவி அதனூடாக தமது அரசியல் பயணத்தை ஆரம்பிக்கின்றனர். இதனை மு.சிவலிங்கம் "ஒரு ரட்சகனின் புறப்பாடு" என்ற கதையில் பதிவுசெய்துள்ளார்.

**தொழிற்சங்கங்களின் சுயலாபப் போக்கும் சுரண்டலும்**

தொழிலாளர்களின் முன்னேற்றத்திலும் விழிப்பிலும் அக்கறை செலுத்திவந்த தொழிற்சங்கங்களில் சில, பிந்திய காலத்தே பெரும் சுரண்டல் நிறுவனங்களாக மாறியுள்ளனஹூ மலையகத்தில் தொழிற்சங்கம் அமைப்பதே ஒரு வியாபார உத்தியாகியுள்ளது. உதாரணத்துக்கு, தொழிற்சங்கம் அமைப்பதே ஒரு வியாபார உத்தியாக மாறியது என்பதை மு.சிவலிங்கம் பின்வருமாறு பதிவு செய்கின்றார்: "இன்று யூனியன்காரர்கள்தான் சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். ஒரு தொழிற்சங்கவாதிக்கு இன்றைய மார்க்கட் ரேட் அங்கத்துவ சந்தா பணம் ஒரு தொழிலாளியின் நாள் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பங்கு அறவிடப்படுகின்றது. அதாவது ஒரு தொழிலாளியிடம் 65 'ரூபாய் கிடைக்கிறது... ஒரு தொழிற்சங்க உரிமையாளன் 100 தொழிலாளர்களைத் தனது சங்கத்துக்குள் பிடித்துக்கொண்டால் ரூபா 65 வீதம் ரூபா 6,500 கிடைக்கும்...! 1000 தொழிலாளர்களைப் பிடித்தால் ரூபா 65,000 ய் கிடைக்கும்...! பத்தாயிரம் தொழிலாளர்களைப் பிடித்துக்கொண்டால் ரூபா ஆறு லட்சத்து ஐம்பதினாயிரம் சுளையாக ஒவ்வொரு மாதமும் கிடைக்கும். இந்தப் பணத்தில்... வீடு, வாசல், காணி, வண்டி, வாகனம் வாங்க முடிகிறது...! பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி படிக்க வைக்க முடிகிறது...!" (சிவலிங்கம், 2010: 173) இத்தகவல்கள் தொழிற்சங்கம் எனும் அமைப்பு எவ்வாறு ஒரு லாபம் தரும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. அதனால் பலரும் தொழிற்சங்க அமைப்பினை லாபம் தரும் தொழிலாகக் கருதும்நிலை பெருகியதோடு அரசியல் ரீதியாக எழுச்சி பெறுவதற்கும் தொழிற்சங்க அமைப்பினைத் துணை கொண்டனர். உதாரணத்துக்கு, மேற்கூறிய கதையில் வரும் மகேந்திரன் என்ற "கிரிமினல் மூளைசாலி" பாட்டாளி முன்னேற்ற சங்கம் என்ற அமைப்பைத் திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்கி, பொருளாதார ரீதியாக வளம்பெற்றதோடு தேர்தலிலும் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினராகி, ஆளுங்கட்சிக்கு ஆதரவு வழங்கி அமைச்சராகின்றான். ஆனால், "இந்த மகத்துவமான வாழ்க்கைக்கு அடித்தளச் சக்தியாக விளங்கும் பாமரத் தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கையை ஒரு நொடியேனும் நினைத்துப் பார்க்க மகேந்திரா விரும்புவதில்லை...!" (மேலது: 174) இத்தகைய போக்கினால் தொழிற்சங்கங்களின் தொழிலாளர் நலன் என்ற அம்சம் கரைந்துபோனது.

தொழிற்சங்கத்தை வியாபார நிறுவனமாக்கிய சில தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்கள் தமது நன்மைக்காக மக்களையும் மக்களின் போராட்டங்களையும் சொற்ப விலைக்கு விற்றுப் பிழைக்கும் நபர்களானார்கள் என்பதையும் மு.சிவலிங்கம் பதிவு செய்துள்ளார். உதாரணத்துக்கு: "மார்கழிப் பூக்கள்" என்ற கதையில் சம்பள உயர்வுக்காகப் போராடிய தொழிலாளர்கள் இறுதியில் போராட்டத்தில் தோல்வியடைகின்றனர். அத்தோல்வி பற்றி உரையாடும் பெண்களின் கருத்துக்கள் பின்வருமாறு அமைந்துள்ளன:

"நம்மகிட்ட யூனியன் போட்டு, நம்ம கிட்ட சந்தா சேத்து, நம்மகிட்ட வோட்டு வாங்கி மந்திரியாகும் தலைவர்மார்க நம்ம போராட்டத்தக் காட்டி குடுத்தாங்க...! நமக்குச் சொந்தமான தொழிற்சங்கத்தைக்கூட அவுங்க சொந்த சொத்தா வச்சிக்கிட்டாங்க...! அவங்களுக்கு கொடும்பாவி எரிச்சி, கருமாதியும் செஞ்சிட்டோம்... இனிமே யூனியன் வேணாமுன்னு சந்தாவ தோட்டம் தோட்டமா நிப்பாட்டுவோம்...! என்றாள் ரஞ்சினி" (மேலது: 156) இந்த உணர்ச்சி வெளிப்பாடு தொழிற்சங்கங்களின் சுரண்டலையும் போலிமையையும் அம்பலப்படுத்தி நிற்பதைக் காணலாம். அவ்வாறே மு.சிவலிங்கத்தின் "பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும்" என்ற கதையிலும் தொழிற்சங்கம் மூலம் அரசியலில் உயர்ந்தவர்கள் மக்களை ஏமாற்றி அரசியலில் நிலைப்பதைக் காணமுடிகின்றது. அக்கதையில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் ஒன்றிணைந்து தமது உரிமைக்காகப் போராடும் மக்களை, அம்மக்களினால் அமைச்சராக்கப்பட்டவர் திசை திருப்பி போராட்டத்தைச் சிதைக்கின்றார். அதனால் தொழிற்சங்கம் மீதான நம்பிக்கையும் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தொழிற்சங்கம் தீர்க்கும் என்ற நம்பிக்கையும் தொழிலாளர்கள் மத்தியிலே வெகுவாகக் குறையத்தொடங்கின. இளந்தலைமுறையினர் தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்களையும் செயற்பாடுகளையும் வெறுக்கத்தொடங்கினர். எடுத்துக்காட்டாக: "எங்க ஊர் தேர்தல்" என்ற கதையில் வரும் சங்கரன் என்ற பாத்திரத்தின் "நாம இப்படியே நம்ம சமூகத்த விட்டுக்கிட்டு இருக்க முடியாது...! கம்பெடுத்தவனெல்லாம் பாம்படிக்கிற மாதிரி... நெனச்ச நெனச்சவனெல்லாம் சங்கம் உண்டாக்குறான்... நாங்க லெச்சம் லெச்சமாக சந்தா சேத்துக்குடுத்துக்கிட்டே இருக்கோம்... நம்ம சந்தாவுல சங்கம் உண்டாக்கி, நம்ம வோட்டுல மந்திரியாகி, நம்மலையே மேய்க்கிறத நாம ஒணரனும்..." (மேலது: 96) என்ற உணர்ச்சித் தெறிப்பு புதிய தலைமுறையினரின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்திநிற்கின்றது. அத்துடன் இப்புதிய சமூக அமைப்பின் பிரதிநிதிகள் மு.சிவலிங்கத்தின் பல கதைகளில் நடமாடுகின்றனர். உதாரணத்துக்கு வடதிசைக் காற்று என்ற கதையில் வரும் ராஜகுமாரனின் பின்வரும் உணர்வலைகள் அவனின் நிலைப்பாட்டையும் புதிய சமூக எழுச்சியையும் வெளிப்படுத்துகின்றது:"இவர்களால் சமூகத்துக்கு என்ன பாதுகாப்பு...? சமூக அரசியலில் தூரநோக்கு இல்லாதவர்கள்... தேர்தலில் மட்டும் ஜெயிக்கின்ற கெட்டிக்காரர்கள்... இவர்களிடம் சமூகம் ஒப்படைக்கப்படுகின்றது. மக்களை வழிநடத்திச் செல்வதற்கு தலைமைகள் இல்லாதபோது நாங்கள் தான் இந்தச் சமூகத்தின் அரசியல் கொம்பன் என்றும் தொழிற்சங்க மேதாவி என்றும் தம்பட்டம் அடித்துக்கொண்டு சமூகத்தை எதிரிகளிடம் தொடர்ந்து காட்டிக் கொடுத்துக்கொண்டு இருக்கும்போது... இவர்களை நம்பி எப்படி சமூகத்துள் வாழ்வது...? (மேலது: 35)

இந்த உணர்வுகள் மலையகத்தில் மேற்கிளம்பும் புதிய பிரதிநிதிகளின் நிலைப்பாட்டையும் தொழிற்சங்கங்களினதும் அத்தொழிற்சங்கத்தை அடித்தளமாகக் கொண்டு மேற்கிளம்பிய அரசியல்வாதிகளின் போலிமையையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. தொழிற்சங்கங்களின் இத்தகைய சுயலாபப் போக்கும் சுரண்டலும் மலையகத் தமிழரின் மேல்நோக்கிய அசைவில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியதோடு தொழிற்சங்க அரசியல் பிற்போக்குத்தனம் நிறைந்தது என்ற எண்ணமும் வளர்த்துவருகின்றது.

### V. தொழிற்சங்கங்களால் ஏற்படும் தொழிலாளர் பிரச்சினைகள்

பெருந்தோட்டத் தொழிலாளரின் விடிவுக்காக அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்களும் அத்தொழிற்சங்கங்களின் துணையினால் வளர்ச்சிபெற்ற அரசியலும் அச்சமூகத்தின் ஐக்கியத்தைச் சிதைத்ததிலும் அவர்களிடையே புதிய முரண்பாடுகளைத் தோற்றுவித்ததிலும் முக்கிய பங்குவகிக்கின்றன. அதற்கு தொழிலாளர்களிடையே நாளுக்கு நாள் பெருகத் தொடங்கிய தொழிற்சங்கங்களும் அவற்றின் அதிகாரப் போட்டிகளும் அடிப்படையாக அமைந்தன. எடுத்துக்காட்டாக, தொழிலாளர்களின்

அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில்கூட தொழிற்சங்கங்களிடையே ஒற்றுமை நிலவவில்லை என்பதை மு.சிவலிங்கம், “மேற்கில் தோன்றிய உதயம்“ என்ற கதையில் பதிவு செய்துள்ளார். சின்னையா என்ற ஒரு குறிப்பிட்ட சங்கத்துத் தலைவர் தோட்டத்தில் உள்ள வீட்டுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்றார். அப்போது “மற்ற யூனியன் தலைவர்மார்கள் சின்னையா தலைவர் கேட்கும் வீட்டுப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடாது என்றே எதிர்பார்த்தனர்...“ (சிவலிங்கம், 2013: 58) இவ்வாறு மலையகத்தில் பெருகிய தொழிற்சங்கங்களினால் அவற்றுக்கு இடையேயான முரண்பாடுகள் பெருகி, தொழிலாளர் ஐக்கியத்தைச் சிதைந்தன. அதனால் பொது எதிரிக்கான போராட்டம் மழுங்கிப்போய் தொழிற்சங்கங்களுக்கு இடையிலும் தொழிலாளர்களுக்குள்ளும் முரண்பாடுகளும் எதிர்ப்புக்களும் பெருகின.

## VI. முடிவுரை

தொழிற்சங்க அரசியலைப் பேசும் மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளை மொத்தமாக நோக்கும்போது, அச்சிறுகதைகள் பேசும் தொழிலாளர்களின் எழுச்சிக்கும் விழிப்புணர்வுக்கும் தொழிற்சங்கச் செயற்பாடுகள் அடிப்படையாக அமைந்தன, தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக ஒன்றிணைந்து போராடவும் அநீதிகளை எதிர்க்கவும் தொழிற்சங்கச் செயற்பாடுகள் மூலம் வாய்ப்பேற்பட்டன, மலையகத் தமிழரின் அரசியல் அபிவிருத்தியில் தொழிற்சங்க அரசியலே முன்னிலை வகிக்கின்றது என்பன மலையகத் தமிழரின் மேல்நோக்கிய சமூக அசைவின் வளர்ச்சிக்கு தொழிற்சங்கச் செயற்பாடுகள் அடிப்படையாக அமைந்தன என்பதையும் தொழிற்சங்க அமைப்பு சுரண்டலும் சுயலாபப் போக்கும் நிறைந்தது, தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன என்பன மலையகத் தமிழரின் மேல்நோக்கிய அசைவின் வீழ்ச்சிக்கு தொழிற்சங்கச் செயற்பாடுகள் காரணமாக அமைந்தன என்பதையும் வெளிப்படுத்திநிற்கின்றன. எனவே, மலையகத் தமிழரின் மேல்நோக்கிய அசைவின் எழுச்சியில் தொழிற்சங்கங்கள் தாக்ககரமான செல்வாக்கினைச் செலுத்தியுள்ளன, மலையகத் தமிழரின் மேல்நோக்கிய அசைவின் வீழ்ச்சியில் தொழிற்சங்கங்கள் தாக்கம் செலுத்திவருகின்றன என்ற இரட்டை எதிர் முரண் பதிவுகள் அச்சிறுகதைகளில் உண்டு. இந்த இரட்டை முரணை வரலாற்றுப் பின்புலத்தில் புரிந்துகொள்ளல் அவசியமாகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் விடுதலைக்கான எவ்வித சமூகநல அமைப்புக்களும் அற்றிருந்த ஆரம்பகாலத்தில் அச்சமூகத்திலிருந்து தோன்றிய தொழிற்சங்கங்களே அவர்களின் விடுதலைக்கான முதன்மை அமைப்புக்களாக இயங்கியுள்ளன. அவ்வமைப்புகளின் செயற்பாடுகளினாலேயே தொழிலாளர்கள் எழுச்சியும் விழிப்புணர்வும் பெற்றதோடு தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் அநீதிகளை எதிர்த்துப் போராடவும் முடிந்தன. அதனால் பெருந்தோட்டத் தொழிலாளர் மீதான அத்துமீறிய அதிகார துஸ்பிரயோகங்கள் தவிர்க்கப்பட்டதோடு தொழில் பாதுகாப்பு, வேலைநேரம், வேதனம் போன்றவற்றில் முன்னேற்றங்கள் ஏற்படத்தொடங்கின. மு.சிவலிங்கத்தின் பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும் என்ற கதையில் போராட்டத்துக்கு தயார் செய்துள்ள சுலோகங்களும், பிரிடிஸ் முகாம்கள் தகர்க்கப்படுகின்றன என்ற கதையில் பிரிடிஸார் ஏற்படுத்தித்தந்த காலனிய கால வாழ்வியலின் தொடர்ச்சியை அறுக்க ஒன்றிணையும் ஐந்து தொழிற்சங்கங்களும், ஒரு ரட்சகனின் புறப்பாடு என்ற கதையில் தொழிற்சங்கம் ஊடாக அரசியலில் பிரவேசம் செய்தலும் தொழிற்சங்கம் ஊடாக தொழிலாளர்கள் பெற்ற விழிப்புணர்வையும் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள போராடுவதையும் வெளிப்படுத்தியுள்ளன. இவை மலையகத் தமிழரின் மேல்நோக்கிய அசைவுக்கு தொழிற்சங்கம் செலுத்திய தாக்கங்களாகும். ஆனால் மலையகத் தொழிற்சங்க வரலாற்றில் ஆரம்ப காலத்தைவிட பிந்திய காலத்தே அவை தொழிலாளர்களையே சுரண்டிக் கொழுக்கும் நிறுவனங்களாகவும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நிறுவனங்களாகவும் மாற்றங்கண்டதோடு தொழிலாளர்களிடையே புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பனவாகவும் அமைந்தன. அவற்றை மு.சிவலிங்கம் மார்கழிப் பூக்கள், சங்ககாலம், எங்க ஊர் தேர்தல், வடதிசைக் காற்று, மேற்கில் தோன்றிய உதயம் ஆகிய கதைகளினூடே வெளிப்படுத்தியுள்ளார். தொழிலாளர்களின் நலனுக்காக இயங்கிய தொழிற்சங்கங்கள் ஏன் இவ்வாறு தடம்மாறி தொழிலாளர்களையே சுரண்டுகின்ற அமைப்புக்களாக மாறின என்பது ஒரு முக்கிய வினாவாகும். மலையகத்தில் ஆரம்ப காலத்தில் இயங்கிய அகில இலங்கைத் தோட்டத்தொழிலாளர் சம்மேளனம், இலங்கை அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்

ஆகியன இடதுசாரிய பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கியவை. ஆனால், அதன்பிறகு தோன்றி இன்று முன்னணி தொழிற்சங்கங்களாக இயங்குகின்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியன முதலாளித்துவ பின்புலத்திலேயே இயங்குகின்றன. அதனால் அவற்றின் தலைமைகளின் செயற்பாடுகள் உழைக்கும் வர்க்கத்துக்கு விடுதலையைப் பெற்றுத்தராமல் தமது வர்க்க நலன் நோக்கியதாக அமைந்துள்ளன. இம்முரணே தொழிற்சங்கங்கள் உழைக்கும் வர்க்கமான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சமூக நகர்வின் வேகத்தில் தளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணியாக அமைகின்றது. மு.சிவலிங்கம் தன் சிறுகதைகளில் தொழிற்சங்கங்களின் பிற்போக்குத் தனங்களாக காட்டுகின்ற தொழிற்சங்கம் சுரண்டல் நிறுவனம், தொழிற்சங்கம் அமைப்பது இலாபகரமான வியாபாரம், தொழிற்சங்கங்கள் தமது இலாபத்துக்காக மக்கள் போராட்டங்களைச் சொற்ப விலைக்கு விற்கின்றன, போராட்டங்களைத் திசை திருப்புகின்றன என்பவையெல்லாம் அத்தொழிற் சங்கங்கள் முதலாளித்துவ அமைப்பாக, முதலாளித்துவத்தைப் பாதுகாக்கின்ற அமைப்பாக விளங்குவதையே சுட்டிநிற்கின்றன. தொழிற் சங்கங்களின் இத்தகைய திசைமாறிய பயணத்தாலேயே மலையகத்தில் மாற்றுத் தொழிற்சங்கங்களின் அவசியத்தை எங்க ஊர் தேர், வடதிசைக் காற்று ஆகிய கதைகளில் அவர் பதிவு செய்துள்ளார்.

இதன்படி மு.சிவலிங்கத்தின் தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்த சிறுகதைப் பதிவுகளானது, தொழிற்சங்கங்களின் உடன்பாடான செயற்பாடுகள் மற்றும் எதிர்மறையான செயற்பாடுகள் என்பனவற்றைச் சுட்டிக்காட்டுவதோடு மாற்றுத் தொழிற்சங்கங்களின் அவசியத்தையும் அவற்றின் செயற்பாடுகளையும் வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. இத்தகைய பதிவுகளுக்கு அவர் தொழிற்சங்கச் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபட்டமையும் பின்னர் தனிப்பட்ட காரணங்களால் தொழிற்சங்கச் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கியமையும் காரணமெனலாம். தொழிற்சங்கச் செயற்பாடுகள் பற்றி உள்ளும் புறமும் நன்கு அறிந்ததனாலேயே ஏனைய படைப்பாளிகள் போல தொழிற்சங்கங்களின் உடன்பாடான அல்லது எதிர்மறையான செயற்பாடுகளை மட்டும் தராமல் மாற்றுத் தொழிற்சங்கங்கள் அமைப்பதன் தேவை, அவற்றின் செயற்பாடுகள் குறித்தும் பதிவு செய்துள்ளார். அப்பதிவுகள் தொழிற்சங்க அமைப்பின் தேவை, அதன் முக்கியத்துவம், செயற்பாடுகள் போன்றன குறித்து மக்கள் மத்தியில் விழிப்பினை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளதோடு தொழிற்சங்கச் செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதை வடிவமைப்பதாகவும் அமைந்துள்ளன.

**உசாத்துணைகள்**

1. கிருஷ்ணமோகன், தனபாலசிங்கம், இலங்கைப் பெருந்தோட்ட தொழிற்சங்க இயக்கங்கள், கொழும்பு-சென்னை குமரன் புத்தக இல்லம், 2008.
2. சந்திரசேகரன், சோ, இலங்கை இந்தியர் வரலாறு, மதுரை வைரவன் பதிப்பகம், 1989.
3. சிவலிங்கம், மு, ஒரு விதை நெல், சென்னை மணிமேகலைப் பிரசுரம், 2005.
4. ஒப்பாரிக்கோச்சி, நாவல் நகர் தமிழ்ச்சங்க வெளியீடு, 2010.
5. வெந்து தணிந்தது காலம், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், 2013.